உ

விநாயகர் துணை.

ஸோமயாஜிமாறனார் சரித்திரம்.

இஃது

திபாகலமுத்திரம்

வி. நாராயணஸாமி ஐய்யரவர்களால்

இயற்றப்பட்டு

கும்பகோணம்

R. குருராஜாசாரியாரவர்களது

கோபாலவிலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை. 1915. பைசா 6.

O23wl9x1,SM
N15
146898

உ

விநாயகர் துணை.

மறையவர் குலத்துதித்த மாறனார் புரிமகத்தில்
பறையனாய் வேடம்பூண்டு பரமனுமவியையேற்க
அடைவுடனாரூரைவிட்டம்பர்மாகாளஞ்சென்ற
கதையினை யானுஞ்சொல்லக் கரிமுகன் காப்பதாமே.

ஒரு காலத்தில் நைமிசாரண்ய வாஸிகளான மகரிஷிகள் சூத முனிவரை நோக்கி ஐயா முனிவரே இக் கலியுகத்தில் ஈசனை நேரில் காண மிகவும் இலகுவான வழி எதுவோ அதை எங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமெனலும், சூதமுனிவர் ஐயா ரிஷிகளே பகவான் பக்தபராதீனன் ஆகையினால் பக்தியினாலன்றி வேறெவ்விதத்தினாலும் பகவானை அடைதல் முடியாது. அப்பக்தியும் ஒன்பது வகைப்படும். அவைகளுள் தாஸபக்தியே மிகச்சிறந்தது. தாஸபக்தி செய்யவேண்டுமானால், ஈசனது அனந்தகல்யாண குணங்களையும் லீலா விநோதங்களையும் உள்ளபடி அறிந்தாலொழிய நமது மனம் அவரை நாடாது. அங்ஙனம் அறிய விரும்பினால் அவரது மெய்த்தொண்டர்களிடம் தான் அறிபலாம். சிவனடியாரைக் கண்டு முதலில் அவருடைய அருளைப்பெற்றுப் பின் அதன் மூலமாய் அடியார்க்கெளியனாகிய ஈசனது அருளைப் பெறுவது தான் இலகுவான வழி என்று உரைத்தார். அதுகேட்ட ரிஷிகள், ஐயா முனிவரே தாங்கள் சொல்லியபடி அடியார் மூலமாக அரனருளைப்பெற்றவர்கள் யாரேனுமுண்டோ, உண்டாயின் அவர் சரித்திரத்தைக் கேட்க விரும்புகிறோமென, சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

சோழமண்டலத்திலே காவேரியின் கிளைநதியாகிய அரிசெல்லாற்றின் கரையிலுள்ளதும் திக்பாலகர், வாஸுகி, பத்திரகாளி முதலியவர்களால் பூஜிக்கப்பெற்றதுமாகிய திருமாகாளம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்திற்குக் கீழ்பாலுள்ள அம்பர் திருமாகாளம் என்னும் திருப்பதியில் மாறனார் என்ற பிராமணச்சிரேஷ்டர் ஒருவர் இருந்தார் அவர் விபூதி, உருத்திராக்ஷம் முதலிய சிவசின்னங்களைத் தரித்துத் தமது வருணத்திற்கேற்ற கருமானுஷ்டானங்களில் சிறிதும் தவறாது சுசீலை என்ற உத்தமபத்தினியோடு கூட இல்லறத்தை நடத்திவந்தார்.

[illegible] நாளில் சோமயாகம் செய்து பகவானை நேரில் வரவழைத்து அவிர்ப்பாகம் கொடுத்துத் திருப்திசெய்விக்கவேண்டுமென்ற ஒரு எண்ணம் அவர் மனதில் தோன்ற, அவர் ஒருநாள் அதை சில சிவனடியார்களிடம் சொல்லிக்கொண்டார். அதுகேட்ட அடியார்கள் அது இலகுவில் முடியக்கூடியதல்ல. ஆயினும் அதற்கு ஒருவழி சொல்லுகிறோம். சிவகணங்களில் தலைமையானவரும் சமுத்திரத்திலிருந்து வெளிப்பட்ட ஆலவிஷத்தைக் கடுகளவாக்கிச் சிவனிடம் கொடுத்தவருமான சுந்தரமூர்த்திநாயனாரென்ற ஒருவர் ஆரூரின்கண் வசிக்கிறார். அவரது பக்திக்கு ஈடுபட்டுப் பரமசிவமே ஒருசமயம் அவருக்குத் தூதனாகச் சென்றாரென்றால் அவர் பெருமையை என்னவென்று சொல்வது. அவரிடம் தெரிவித்துக்கொண்டீரானால் அவர் உமது இஷ்டத்தை நிறைவேற்றுவார் என்று சொன்னார்கள். உடனே மாறனார் திருவாரூருக்குச்சென்று நாயனாரிருக்குமிடத்தை விசாரித்தறிந்து பிறகு அவரைப் பார்க்கவெண்ணி, பெரியோர்களிருக்குமிடங்களில் வெறுங்கையோடு போகலாகாது என்பார்களே. நாம் நாயனாருக்குக் கையுறையாக யாது கொண்டுபோகலாம் எனப்பலவாறு யோசித்துப் பிறகு தூதுளங்கீரை நாயனாருக்குப் பிரியமானதென உணர்ந்து, விடியற்காலத்திலெழுந்து நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு காட்டிற்குச்சென்று பூச்சி, புழு, இல்லாததும், இளம் தளிருமான தூதுளங்கீரையைப் பறித்துப் பொட்டணமாகக் கட்டி எடுத்துக்கொண்டு நாயனார் கிருஹத்தையடைந்து அவரைக்காணாமையால் அக்கீரையை அவரது பத்தினியாகிய பரவையாரிடம் கொடுத்துவிட்டு நாயனாரைக்காணுமளவும் இவ்வண்ணமே செய்துவருவேன் எனத்தீர்மானித்து ஒவ்வொருநாளும் அப்படியே செய்துவந்தார். பரவையாரும் அதைவாங்கி நன்றாய்ப் பாகஞ்செய்து நாயனாருக்குப்படைக்க அவரும் அதை அதிக ஆவலோடு புஜித்துவந்தார்.

இது நிற்க; எல்லார் உள்ளத்திலும் நிறைந்து விளங்கும் பகவான் மாறனாரின் உள்ளக் கருத்தையும் அவர் தொண்டின் திறத்தையும் உணர்ந்து, அதைச்சிறிதும் அறியாதிருக்கும் நாயனாருக்கு அதை அறிவிக்கக்கருதி அகாலத்தில் பேரிடி முழக்கத்தோடு மழை பொழியச் செய்தனர். ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடினமையால் அதைக்கடக்கமாட்டாமல் மாறனார் மழை

யில் நனைந்து அவஸ்தையடைந்து தொண்டர்தொண்டிக்கு இன்விக்கினம் நேரிட்டுவிட்டதே. இதுவும் சிவன்செயலேயாகுமெனவெண்ணி அன்றையப்பொழுதை அங்கேயே போக்கினார்.

நாயனார் அன்றையதினம் கலத்தில் தூதுவளங்கீரையைக்காணாமல் பரவையாரை நோக்கி இன்று என் தூதுவளங்கீரை படைக்கப்படவில்லையென்று வினவவும், பரவையார் நாதா, ஒரு பிராமணர் தினந்தோறுங் கொண்டுவந்து கொடுக்க நான் அதைப்பாகம்செய்து படைத்து வந்தேன். இன்று அவர் கொண்டுவராததினால் படைக்கப்படவில்லையென வுரைத்ததும் நாயனார் திடுக்கிட்டு அந்தோ அவ்வந்தணர் யாது காரணமாக இங்ஙனம் செய்கிறாரோ அவரது செய்கையைச்சிறிதும் யான் கவனிக்கவில்லையேயெனப்பலவாறு வருந்திப்பின்பு அவ்வந்தணர் நாளையதினம் வருவரேல் அவரை இங்கேயேயிருக்கும்படிசெய்யுங்கள் என ஆக்ஞாபித்தார். மாறனாரோ விடியற்காலத்தில் எழுந்து ஆற்றில் வெள்ளம் வடிந்திருப்பதை உணர்ந்து சந்தோஷித்து முதல்நாளைக்காக ஒன்றும், அன்றையதினத்திற்காகவொன்றும், ஆகஇரண்டு பொட்டணங்களையும் கொண்டுபோய்ப்பரவையாரிடம் கொடுக்க அவர் அதை ஏற்று நாயனாரின் உத்திரவைத் தெரிவிக்க அவரும் அங்கேயே இருந்தார். நாயனார் வீட்டிற்குவந்ததும் மாறனாரைக்கண்டு அவரைப்பலவாறு உபசரித்து இருவரும் போஜனமருந்தித் தாம்பூலந்தரித்துப் பின் வந்த காரியமென்னவென்று வினவ மாறனார் எழுந்து சுந்தரமூர்த்தியைப் பணிந்து தன் கருத்தை தெரிவித்தார். அதுகேட்ட நாயனார் உமது கருத்து இக்கலியில் எளிதில் முடியக்கூடியதன்றே எனவும், மாறனார், ஹேபக்தசிகாமணியே மாணிக்கவாசகருக்காக நரியைப்பரியாக்கவில்லையா வாணியச்சிக்காகக் கல்லில் மண் சுமக்கவில்லையா, சாக்கியநாயனாரின் பக்திக்காகத் தினமும் ஒரு கல்லடி படவில்லையா, அடியார்பொருட்டு அரன் புரியாத காரியம் ஒன்றுண்டோவெனப் பலவாறு தோத்தரிக்க நாயனார் மாறனாரே உமது உறுதியான பக்திக்கு ஈசன் கட்டாயம் அருள்புரிவார். நீர் நான் வருமளவும் இங்கே தானே இரும் என்றுரைத்து, எழுந்து ஆலயத்துள் நுழைந்து தியாகேசனைக் கண்டு வணங்கி மனமுருகப் பாடித் துதித்ததும் ஈசன் என் சுந்தரமே உன் பாடலை நாம் அநேகமுறை கேட்டு ஆனந்தித்திருக்கிறோமாயினும் இன்று பாடியதுபோல் இவ்வளவு உருக்

மாய் இதுவரையில் பாடினதில்லை. உனது பாமாலைக்கேட்டு நாம் மிகவும் சந்தோஷமடைந்தோம். உனக்கு யாது வேண்டுமென்று வினவலும், நாயனார் தேவரீர் திருவுளம் அறியாதது ஒன்றுமில்லை. ஆயினும் என்னை ஒரு பொருட்டாகவெண்ணிக் கேட்டதனால் சொல்லுகிறேனென்று தன் கருத்தைத் தெரிவித்தார். அது கேட்ட தியாகேசன் அன்பனே உனக்குத்தொண்டுசெய்வது மட்டும் போதாதா ஊரிலுள்ளவர்கட்கும் தொண்டு செய்ய ஏவுவது உனக்குத் தகுமா. என நாயனார் என் ஐயனே யான் ஈசனை நேரில் வரும்படியாக எப்படியும் கேட்டுக்கொள்ளுகிறேனென்று அப்பிராமணனுக்கு வாக்குக்கொடுத்துவிட்டேனாகையால் அடியேன் வாக்குத் தவறாவண்ணம் காப்பது உமது பொறுப்பு என வேண்டலும் ஈசன் சரி நாம் எந்த ரூபத்தோடு வருகிறோமோ அதை அறிந்து பூஜை செய்தால் வருவதற்கு ஆக்ஷேபமில்லையென்று அருளிச்செய்தார். நாயனார் பகவானிடம் உத்திறவுபெற்றுக்கொண்டு வீட்டையடைந்து ஈசனது ஆக்ஞையைப் பிராமணனுக்குத் தெரிவித்தார். மாறனாரும் உமது அனுக்கிரகத்தால் அப்படியே செய்கிறேனென்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு தன் ஊரை அடைந்தார்.

அன்றுமுதல் யாகத்திற்குவேண்டிய பொருள்களைச் சேகரித்து, யாகசாலையமைத்து, வேதிகைசமைத்து நல்லசுபதினத்திலே குருமுகமாக யாகதீக்ஷவகித்து வைகாசிமீ சுக்கிலபக்ஷம் மிருகசீரிடநக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் யாகத்தை ஆரம்பித்து 4 நாள் யாகமும்செய்துமுடித்து 5 ம்நாள் காலையில் பசுவதைசெய்வித்து வபையை எடுப்பித்து ரித்விக்குக்களின் முகமாய் வேதமந்திரங்களைச்சொல்லி யாகபதியாகிய ஈசனை அழைக்கவும், ஸர்வவியாபியாகிய ஈசன, மாறனார் யாகசாலையில் தன்னை அழைப்பதை உணர்ந்து லோகமாதாவாகிய அம்பிகையை அழைத்து நாமஅம்பர் திருமங்களம்போகிறோம் நீயும் உன்குழந்தைகளோடு புறப்படு என்றுசொல்லித் தான் கறுத்தமேனியும், சுருட்டைமயிரும் யாவரும் கண்டருவருக்கத்தக்க பறையனாக வேடம்பூண்டும், நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாகச்செய்து பிடித்துக்கொண்டும், வாகனமாகிய விருஷபத்தைச்செத்த பசுங்கன்றாக்கித் தோளில்மாட்டிக்கொண்டும், சந்திரனைப் பாக்குப்பையாகச்செய்து அக்குளிலிடுக்கிக்கொண்டும், சூலத்தைக் கோலாக்கிக் கையில் பிடித்தும், கபாலத்தைக் குடமாக்கி, கங்கையைக் கள்ளாக்கி அ

தில் பெய்து எடுத்துக்கொண்டும் புறப்பட, அப்பிகையும் ஈசனது வேடத்திற்கிசையத்தானும் ஓர்பறைச்சியாக வேடம்பூண்டு கைகளில் பித்தளைக்காப்புகள் கலகலென ஒலிக்கக்காதில் சுருள்இட்டுக் கழுத்தில் சங்குமணிகளை ஆபரணமாக வணிந்துகொண்டு பரமனைத்தொடரவும், விநாயகர், முருகக்கடவுள் இருவரும் பறைச்சிறுவர்களாக வேடம்பூண்டு வயல்களிலுள்ள நண்டு, நத்தை முதலியவைகளைப் பிடித்துக்கொண்டுவரவும், திக்பாலகர் முதலிய தேவகணங்கள் கொம்பு, தப்பட்டை முதலிய வாத்தியங்களை எடுத்துக்கொண்டு பரமனைப்பின்தொடரவும் எல்லோரும் யாகசாலையை நோக்கிப் புறப்பட்டார்கள்

மாறனார் குறித்தகாலம் நெருங்கியும் ஈசன்வாராததைக்கண்டு மனம்நொந்து மிகவும் உருக்கத்துடன் பின்னும் பலமுறை அழைக்க அஃதுணர்ந்தநாதன் தன்னுடைய வரவை முன் அறிவிக்கும்படி அருகிருந்த வாதாபிகணபதியை அனுப்ப அவரும் அப்படியே அறிவித்துவிட்டு அவ்வியாகசாலையிலேயே ஓர்புறத்திருந்தனர். ஈசன் தன் பரிவாரத்தோடுகூட கொங்குறுயநல்லூர் என்கிற பொங்குசாராயநல்லூரை அடைந்ததும் அம்பிகையின் தலையிலுள்ள கட்குடமானது பொங்கி வழியஆரம்பித்தது. அதுகண்ட ஈசன் அக்கள்ளைவாரிவாரித் தானும் உண்டு தன்பரிவாரங்களுக்கும் அளித்துத் தாம்பூலம் தரித்துக்கொண்டு ஆனந்தத்தினால் ஆடிக்கொண்டே தப்பமங்கலத்தை அடைந்ததும் கள்ளின்மயக்கம் தலைக்கேறக் கேழ்ப்பவர்காது செவிடுபடும்படி கொம்பைஊதியும் தப்பை அடித்துக்கொண்டும் யாகசாலையை நெருங்கினார்கள். யாகசாலையிலிருந்த ரித்விக்குக்களும் மற்றபிராமணர்களும், வருகிறவர் ஈசனென்றறியாமல், வந்துவிட்டான் பறையன், கெட்டுவிட்டதுயாகம், இந்தயாகம் இனித்தேறுது என்று பலவாறு ஏசி, ஈசனைக் கற்களால் அடித்தார்கள். ஈசன் அங்கிருந்த ஒனியாரப்பர் என்னும் சாஸ்தாகோவிலில் மறைந்துகொண்டு, நாயகளைஏவினார். அதுகண்ட அந்தணர், எடுத்தார் ஓட்டம். தம்மை நிந்தித்தவர்களையெல்லாம் நீசராகும்படிச் சபித்துவிட்டு யாகசாலையினுள்வந்தார் ஈசன். தனிமையாயிருந்தமாறனார் கண்டார் நீசரூபத்தை, கணபதியும் அவர்தான் ஈசனென்று காட்டினார்கையினால், பணிந்தார் மாறனார், பலவாறு பாடித்துதித்தார், பக்தானுக்ரஹம்செய்ய நினைத்தார் ஈசனும், மாறனார் எடுத்தார் அவிர்ப்பாகத்தை, அர்ப்பணம்செய்தார் ஈசனுக்கு, ஈசன் ஆனந்தம்கொண்டார். ஆகாயத்தில் விருஷபாரூடராய்த் தோன்றினார்.

தேவர்கள் புஷ்பமாரிபொழிந்தார்கள். தும்புரு, நாரதர் கானம் செய்தார்கள். தேவதுந்துபி முழங்கின. ஈசனைக்கண்ட மாறனார் அங்கம்பூரிப்ப, இருகண்களிலும் ஆனந்தபாஷ்பம்பெருக, நாக்கு மூற மெய்சிலிர்ப்பப் பன்முறைவணங்கிப் பலவாறுபாடித் துதித்தனர். அதுகண்ட ஈசன் சந்தோஷங்கொண்டு நீர் நம்மை மோகயாகத்தினால் திருப்திசெய்வித்தமையால் இதுமுதல் உமக்கு மோ மயாஜிமாறனார் என்ற பெயர் வழங்கக்கடவது நீர் இன்னும் சிறிதுகாலம் இப்பூமியிலிருந்து நமது மகிமையையும், நம்முடைய அடியார்களின் மகிமையையும் ஜனங்கள் அறியும்படிசெய்து பிறகு நமது உலகை அடையக்கடவீர் என்று அனுக்ரஹித்து மறைந்தருளினார்

அதுதெரிந்த தீக்ஷிதர்முதலானவர்கள் அந்தோ ஈசனைக்கண்டு பறையனென்றெண்ணி ஏமாந்தோமே ஈசனது சாபத்திற்கு ஆளாகிவிட்டோமே இனி என்னசெய்வது என்று பலவாறு யோஜித்துப்பிறகு முள்ளைமுள்ளாலேயே எடுப்பதுபோல் எந்தமாறனார்விஷயத்தில் நமக்குச்சிவாபராதம் ஏற்பட்டதோ அந்தமாறனாரைக்கொண்டே அதைத்தீர்த்துக்கொள்ளவேண்டும் என்று தீர்மானித்து எல்லோரும் மாறனாரைஅடைந்து அவரோடுகூட ஆலயத்தைச்சேர்ந்து ஈசனைப்பலவாறுவேண்ட, அப்பொழுது நாளைய தினம்காலையில் எல்லாரும் இங்கேவந்தால் நிர்மால்யதரிசனம் தருகிறோம். என்று ஒரு அசரீரிவாக்கு உண்டாயிற்று. அப்படியே எல்லோரும் மறுநாள்காலையில் அங்குவந்துசேர்ந்ததும் ஈசன் முதல்கொண்ட ஸ்வரூபத்தை மறுபடியும் அவர்களுக்குக்காட்டினார். அதுகண்ட விப்பிரர் அநேகம்முறை பணிந்து, ஹே; பக்தவத்ஸலா அறியாமையால் செய்த எங்கள் பிழையைப்பொறுத்து எங்களுக்குச்சாபவிமோசனம் செய்யவேண்டுமென்று பலகாலும்வேண்ட ஈசன் ஹே, பிராம்மணர்களே உங்கள் ஸ்தோத்திரத்திற்கு மெச்சினேன். ஆயினும் சிவனையும் சிவனடியாரையும் நிந்திப்பவர்கள் அடையும் பலனிதுவென உலகத்தார் அறியும் வண்ணம் நீங்கள் பகலில் ஒரு முகூர்த்தம் நீசதன்மையை அடைந்திருப்பீர்களாக என்று சாபானுக்ரஹம் செய்து மறைந்தனர்.

பிராம்மணர்களெல்லோரும் ஈசனது லீலாவிநோதங்களை நினைத்து ஆனந்தப்பட்டுக்கொண்டு தத்தம் வீடு சென்றார்கள். மாறனாரும் உலகமெங்கும் சைவசமயமானது தழைத்தோங்கும்படி சிவபக்தியின் மகிமையை நன்குவிளக்கி இறுதியில் சிவசாயுஜ்யத்தை யடைந்தனர். ஓம் சுபம். முற்றிற்று.

146898

146848